செ.வெ.எண்:16 நாள்:08.06.2021

**<u>கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை டாப்சிலிப் கோழிகமுத்தி யானைகள் முகாமில் யானைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை (SWAP TEST) மேற்கொள்ளப்பட்டுவருவதை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை டாப்சிலிப் கோழிகமுத்தி யானைகள் முகாமில் யானைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை (SWAP TEST) மேற்கொள்ளப்பட்டு வருவதை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்ஆய்வின்போது பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.சண்முகசுந்தரம், கூடுதல் முதன்மை வன பாதுகாவலர் திரு.அன்வர்தீன்,இ.வ.ப., பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு.வைத்தியலிங்கம்,இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் திரு.ஆரோக்கிய சேவியர், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) திரு.பிரசாந்த், உதவி வன பாதுகாவலர் திரு.செல்வம் மற்றும் வனத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றார்கள். இந்நிலையில் வண்டலூர் பூங்காவில் உள்ள சிங்கத்திற்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. **இதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.06.2021 அன்று** வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு நேரடியாக ஆய்வு மேற்கொண்டதுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து உயிரியல் பூங்காவிலும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த உத்தரவிட்டார்கள். மேலும் தமிழகத்தில் அரசு பராமரிப்பில் உள்ள அனைத்து வனவிலங்குகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். அதன்

அடிப்படையில் இன்று வனக்கால்நடை மருத்துவர்களைக் கொண்டு இரண்டு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு ஆனைமலை டாப்சிலிப் கோழிக்கமுத்தி யானைகள் முகாமில் உள்ள 28 யானைகளுக்கும், நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை தெப்பக்காடு யானைகள் காப்பகத்தில் உள்ள 28யானைகளுக்கும் இன்று கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை (SWAP TEST) மேற்கொள்ளப்பட்டு உத்திரபிரதேசம் மாநிலத்தில் உள்ள பெல்லாரி ஆய்வகத்திற்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என கண்டறிய அனுப்பிவைக்கப்படுகிறது.

தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை புலிகள் காப்பகம் டாப்சிலிப்பில் நிரந்தர முகாமாக கோழிகமுத்தியும், மாற்று முகாமாக வரகளியாறும் செயல்பட்டு வருகின்றது. டாப்சிலிப்பில் உள்ள கோழிகமுத்தி யானைகள் முகாமில் 18ஆண் யானைகள், 10 பெண் யானைகள் என 28 யானைகள் வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் 3 யானைகள் கும்கி யானைகள், 5 யானைகள் சவாரி யானைகள், 4 யானைகள் வயது முதிர்வினால் ஓய்வு பெற்ற யானைகள் உள்ளன.

வனங்களில் சுற்றித் திரியும் இம்முகாமிற்கான யானைகள் காலை 6.30 மணியளவில் முகாமிற்கு காடுகளிலிருந்து திரும்பி வருகின்றது. 6.30 மணிமுதல் 8.00 மணிவரை யானைகள் குளிக்கவைக்கபடுகின்றது. 8 மணி முதல் 8.30 மணிவரை யானைகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. 8.30 மணி முதல் 9.00 மணிவரை யானைகளுக்கு உணவளிக்கப்பட்டு, கால்நடை மருத்துவர்களைக் கொண்டு தினசரி பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

பின்னர் 9.00 மணி முதல் 3.30 மணிவரை மீண்டும் வனப்பகுதிகளுக்கு யானைகள் திரும்பிவிடப்படுகின்றன. மாலை 3.30 மணி முதல் 5.00 மணிவரை மீண்டும் யானைகளை தேய்து குளிக்க வைக்கப்பட்டு, 5.30 மணி முதல் 6.00 மணி வரை சமைக்கப்பட்ட சத்துமிக்க உணவுகள் வழங்கப்பட்டு மீண்டும் வனத்திற்குள் விடப்படுகின்றன. இங்கு பாகன்கள், உதவியாளர்கள் என 53 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

யானைகளுக்கு இங்கு காலை மற்றும் மாலையிலும் கொள்ளு, அரிசி சாதம், ராகி களி, உப்பு, வெல்லம், விஷேச தினங்களில் கரும்பு மற்றும் வாழைப்பழங்களும் உணவாக தரப்படுகிறது.

தமிழகத்தில் பாகன்களுக்கு 100 சதவீதம் தடுப்பூசி செலுத்தப்பட்ட முதல் யானைகள் முகாமாக கோழிகமுத்தி உள்ளது. அதன்படி நேற்று யானை பாகன்ங்கள், உதவியாளர்கள் என 60 பேருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை (**SWAP TEST**) மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாகன்கள் அனைவரும் கட்டாயம் முககவசம் அணிய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வனத்துறையில் வேட்டை தடுப்பு பாதுகாவலர் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு வனப்பகுதியில் வனவிலங்குகள் தினசரி நடமாட்டத்தை கண்காணித்து வனத்தினை ஒட்டியுள்ள குடியிருப்பு வாசிகளுக்கு தகவல் அளித்து வருகின்றது. இதனால் மனித வனவிலங்கு மோதல்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டு வருகின்றது என **மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தெரிவத்தார்.**

முன்னதாக பொள்ளாச்சி சேத்துமடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் மரக்கன்று நட்டினார். பின்னர் பொள்ளாச்சி சேத்துமடை பகுதி முன்கள பணியாளர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

மேலும் ஆனைமலை டாப்சிலிப் கோழிகமுத்தி யானைகள் முகாமில் வனவிலங்கால் பாதிக்கப்பட்டுள்ளவருக்கு ரூ.3.50இலட்சம் நிவாரண நிதியையும், வேட்டை தடுப்பு பாதுகாவலர்ககான உடைகளையும், மற்றும் வன அலுவலர்களுக்கு கொரோனா தடுப்பு உபகரணங்களையும் வழங்கியும், வனத்துறை பாதுகாவலர்களுக்கு தடுப்பூசி போடப்படுவதையும், டாப்சிலிப் அரசு வன உண்டு உரைவிடப் பள்ளியையும் **மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள்** பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**